

கன்னியாகுமரி மாவட்டம், ஓகி புயலின் தாக்கத்தினால் மின்சார வசதி முற்றிலும் துண்டிக்கப்பட்டதால், குடிநீரின்றியும் பயிரிடப்பட்ட தென்னை, வாழை உள்ளிட்ட
வேளாண் பயிர்களுக்கு தண்ணீரின்றியும் தவிக்கும் விவசாயிகளின் குறைகளை தீர்க்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,
மின்னாக்கி (ஜெனரேட்டர்) உதவியோடு இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இலந்தையடிதட்டு பகுதியில் தண்ணீர் கொண்டு செல்லப்படுவதை
இன்று (08.12.2017) மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், தகவல் தொழில்நுட்ப முதன்மை செயலாளருமான திரு. டி.கே. இராமச்சந்திரன் இ.ஆ.ப., மாவட்ட கூடுதல்
கண்காணிப்பு அலுவலரும், தொழில்துறை முதன்மை செயலாளருமான முனைவர் இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., வேளாண்மைத்துறை முதன்மை செயலாளர்
திரு. ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திருமதி ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப., மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு செய்தனர். உடன் இராஜாக்கமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி அனிதா,
இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய உதவி பொறியாளர் திருமதி கவிதா மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் நகராட்சி தக்கலை தலைமை அரசு மருத்துவமனை வளாகத்திலுள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றும் பணிகளை மாவட்ட கண்காணிப்பாளர் திரு.டி.கே.இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள், இன்று (04.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் நகராட்சி தக்கலை தலைமை அரசு மருத்துவமனை வளாகத்திலுள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றும் பணிகளை மாவட்ட கண்காணிப்பாளர் திரு.டி.கே.இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள், இன்று (04.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றிய திக்கணாங்கோடு ஊராட்சியில் ஜெனரேட்டர் மூலம் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றும் பணிகளை மாவட்ட கண்காணிப்பாளர் திரு.டி.கே.இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள், இன்று (04.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



கன்னியாகுமரி மாவட்டம், வில்லுகுறி பேரூராட்சி குளுமைக்காடு பகுதியில் ஜெனரேட்டர் மூலம் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றும் பணிகளை மாவட்ட கண்காணிப்பாளர் திரு.டி.கே.இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள், இன்று (04.12.2017) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.